بِسْمِ اللّٰهِ الرَّحْمَنِ الرَّحِيمِ

# அன்பான வேண்டுகோள்!

وَمَنْ يُشَاقِقِ الرَّسُولَ مِنْ بَعْدِ مَا تَبَيَّنَ لَهُ الْهُـــدَى وَيَتَّبِـــعْ غَيْـــرَ سَـــبِيلِ الْمُـــؤْمِنِينَ

نُوَلِّهِ مَا تَوَلَّى وَنُصْلِهِ جَهَنَّمَ وَسَاءَتْ مَصِـــيرًا

நேர்வழி இன்னதெனத் தனக்குத் தெளிவான பின்னரும், இத்தூதரை விட்டுப் பிரிந்து இறைநம்பிக்கையாளர்கள் செல்லாத வழியில் செல்கிறவனை, அவன் செல்லும் வழியிலேயே விட்டுவிட்டு, அவனை நரகத்திலும் நுழையச் செய்வோம். அது சென்றடையும் இடங்களில் மிகக் கெட்ட இடமாகும்.

**திருக்குர்ஆன் 4:115**

படுகளம் நடத்தும் நிர்வாகிகளே, பங்கேற்கும் அன்புச் சகோதர, சகோதரிகளே! சற்று சிந்தித்துப் பாருங்கள்!

1. இறைவனை மட்டும் வணங்கச் சொல்கிறது இஸ்லாம்.
2. இறைவனிடம் மட்டுமே பிரார்த்தனை செய்யச் சொல்கிறது இஸ்லாம்.
3. இசையுடன் கூடிய பாடல்களைத் தவிர்க்க சொல்கிறது இஸ்லாம்.
4. இஸ்லாம் என்றாலே அமைதி, இறைவனுக்கு மட்டும் கட்டுப்படுதல்.
5. இறைவன் மீது ஈமான் கொள்வது, தொழுகை, நோன்பு, ஜகாத், ஹஜ் ஆகிய ஐம்பெரும் கடமைகளே இஸ்லாமின் தூண்கள். இந்த வணக்க வழிபாடுகளை எவ்வாறு செய்ய வேண்டும் என்பதை நபி(ஸல்) தம் 23 ஆண்டுகால வாழ்க்கையில் அழகிய முறையில் முன்மாதிரியாக வாழ்ந்து காட்டியுள்ளார்கள்.

நபி(ஸல்) அவர்களை நாம் நம் உயிரைவிட அதிகமாக நேசிக்கவேண்டும். அவர்கள் வாழ்ந்து காட்டிய வாழ்க்கை முறைப்படி வாழ்வதில்தான் அந்த நேசம் வெளிப்படும். அது இஸ்லாம் ஆகும். நபி(ஸல்) காட்டித் தராத ஒவ்வொரு செயலும் வழிகேடாகும்.

இறைத்தூதர்(ஸல்) உரை நிகழ்த்தியபோது, உரைகளில் சிறந்தது அல்லாஹ்வின் வேதம்- திருக்குர்ஆன் ஆகும். வழிகாட்டுதலில் சிறந்தது முஹம்மதின் வழிகாட்டுதலாகும். செயல்களில் தீயது (இஸ்லாமிய பெயரால்) புதிதாக உண்டாக்குவது ஆகும். (இஸ்லாமின் பெயரால் புதிதாக உருவாக்கப்படும்) ஒவ்வொரு புதுமையும் வழிகேடு ஆகும் வழிகேடு ஒவ்வொன்றும் நரகத்தில் சேர்க்கும் என இறைத்தூதர்(ஸல்) கூறினார்கள்.

**அறிவித்தவர்: ஜாபிர் இப்னு அப்தில்லாஹ்(ரலி)**

**நூல்: ஸஹீஹ் முஸ்லிம் ஹதீஸ் எண்: 1573**

சகோதர சகோதரிகளே இப்போது சற்று சிந்தியுங்கள் ! நீங்கள் செய்து வரக்கூடிய படுகளம் நபி(ஸல்) அவர்கள் காட்டித் தந்த வழிமுறையா? அல்லது பிற மதத்தவர்கள் செய்து வரும் வழிபாடா?

| இஸ்லாமியர்கள் எனக் கூறும் நீங்கள் முஹர்ரம் மாதத்தில் செய்வது | தங்களின் திருவிழாக்களில் பிற மதத்தவர்கள் செய்வது |
|---|---|
| மாலையிட்டு பஞ்சா எடுப்பது | சந்தனம் பூசி மாலையிட்டு தலையில் கும்பம் வைப்பது |
| சந்தனக் கூடு தூக்குவது | சப்பரத்திருவிழா, தேர் இழுத்தல் |
| பூக்குழி இறங்குதல் | தீ மிதித்தல் |
| நன்மைக்காக மாவிளக்கு ஏந்துதல் | பால் கொழுக்கட்டை செய்தல் |
| உப்பு மிளகு போடுதல் | மஞ்ச நீருடன் வத்தல் கலந்து பயன் படுத்துதல் |
| செண்டா அடித்தல்; | கொட்டு மேளம் அடித்தல்; |
| வெடி வெடித்தல்; | வெடி வெடித்தல்; |
| முச்சந்தியில் நேருக்கு நேர் கூடுகள் சந்தித்தல் | முச்சந்தியில் தேர்கள் நேருக்கு நேர் சந்தித்தல்; |
| பொது அமைதிக்கு வேட்டு வைக்கும் ஆடல், பாடல் | பொது அமைதிக்கு வேட்டு வைக்கும் ஆடல், பாடல்; |

இது தான் இஸ்லாமா? முஹர்ரம் மாதத்தின் முதல் 10 நாட்களில் குழாய் ஒலி பெருக்கிகளை ஊர் முழுவதும் அமைத்து ஒலி எழுப்புவதால், எத்தனை மாணவ, மாணவிகளின் படிப்பு பாதிக்கிறது, இரவு நேரங்களில் நீங்கள் செய்யும் இஸ்லாமிற்கு முரணான ஆடல், பாடல், செண்டா சத்தத்தினால் எத்தனை குழந்தைதள், நோயாளிகளின் மன அமைதி கெடுகிறது. இதை நீங்கள் என்றாவது யோசித்தீர்களா? எத்தனை குடும்பங்கள் மனதிற்குள் வேதனைப் பட்டு சபிக்கிறார்கள் என்பதை நீங்கள் அறிவீர்களா?

நீங்கள் ஒன்றை மட்டும் உணர்ந்து கொள்ளுங்கள், இஸ்லாமை அறியாத அரசாங்கம் உங்களை அனுமதிக்கலாம் இறைவனின் சட்டத்தை புரியாத காவல் துறை உங்களை பாதுகாத்து சாதனை புரியலாம்.

இஸ்லாமிய மார்க்கம் உங்களின் செயல்பாடுகளால் களங்கப் படுத்தப் படுகிறது என்பதை உங்களுக்கு சொல்ல வேண்டியது எங்கள் கடமை. அதைத்தான் நாங்கள் செய்கிறோம். இன்ஷாஅல்லாஹ் எங்களுக்கு

உயிர் உள்ளவரை இஸ்லாமிற்காகவே வாழ்வோம்; அனாச்சாரங்களை ஒழிப்பதற்குப் பாடுபடுவோம்.

இறைவனின் கோபமும்,வேதனையும் இறங்கினால் யாரால் தாங்க முடியும்? எத்தனையோ அரசாங்கங்கள் அல்லாஹ்வின் வேதனையால் தவிடு பொடியாகி தடம் தெரியாமல் போய்விட்டன என்பதை நிகழ்காலம் உணர்த்திக் கொண்டே இருக்கிறது.

அக்கிரமம் இழைத்தவர்களின் ஆஸ்திகள் அழிந்து போயிருக்கின்றன. அவர்களின் ஆணவம் மண்ணோடு மண்ணாகியுள்ளது.

அநியாயங்களுக்கு துணை நின்று காவல் காத்தவர்கள், அநியாயத்தை கண்டுகொள்ளாமல் நமக்கு ஏன் வம்பு என ஒதுங்கி நின்றவர்களும் காணாமல் போய்விட்டார்கள்.

இறுதியாக ஒன்றை நினைவு படுத்துகிறோம்

திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறுகிறான்:

يَوْمَ تُقَلَّبُ وُجُوهُهُمْ فِي النَّارِ يَقُولُونَ يَا لَيْتَنَا أَطَعْنَا اللَّـهَ وَأَطَعْنَا الرَّسُولَا

وَقَالُوا رَبَّنَا إِنَّا أَطَعْنَا سَادَتَنَا وَكُبَرَاءَنَا فَأَضَلُّونَا السَّبِيلَا

رَبَّنَا آتِهِمْ ضِعْفَيْنِ مِنَ الْعَذَابِ وَالْعَنْهُمْ لَعْنًا كَبِيرًا

நெருப்பில் அவர்களின் முகங்கள் புரட்டப்படும் அந்நாளில்,

"ஆ, கை சேதமே! அல்லாஹ்வுக்கு நாங்கள் வழிப்பட்டிருக்க வேண்டுமே! இறைத்தூதருக்கும் நாங்கள் வழிப்பட்டிருக்க வேண்டுமே!" எனக் கூறுவார்கள்.

"எங்கள் இரட்சகனே! நிச்சயமாக நாங்கள் எங்களின் தலைவர்களுக்கும், எங்களின் பெரியவர்களுக்கும் வழிப் பட்டோம்; அவர்கள் எங்களை வழி கெடுத்து விட்டார்கள்" என்றும் அவர்கள் கூறுவார்கள்.

"எங்கள் இரட்சகனே! அவர்களுக்கு இருமடங்கு தண்டனையைத் தருவாயாக! அவர்களைப் பெரும் சாபத்தாலும் சபிப்பாயாக" (என்றும் கூறுவர்)

திருக்குர்ஆன் 33:66-68

அன்புச் சகோதர,சகோதரிகளே நீங்கள் இஸ்லாமிய அடிப்படைக் கொள்கை களை விளங்காமல் படுகளம் நடத்தி இஸ்லாமை இழிவுபடுத்தி வருகிறீர்கள். இன்னொரு பக்கம் உங்களின் தொல்லைகளுக்கு ஆளாகும் குடும்பங்களும் உள்ளன. அவர்கள் உங்களுக்கு எதிராக சாபமான வார்த்தைகள் கூறிவரு

கிறார்கள். இஸ்லாமிய மார்க்கத்தை அறிந்து அதைத் தூய்மையாக பின்பற்றும் மக்களோ மனவேதனை அடைந்து உங்களுக்கு எதிராக அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்து வருகிறார்கள் இது உங்களுக்கு தெரிய வேண்டாமா? இதுமட்டுமல்லாமல் இவ்வுலகில் உங்களோடு இருந்தவர்கள் மறுமையில் பெரும் சாபத்தை உங்களுக்கு எதிராக அல்லாஹ்விடம் கேட்பார்கள் இவற்றை எல்லாம் அறியாமல்தான் நீங்கள் செயல்பட்டுவருகிறீர்களா?

அல்லாஹ் கூறுவதை கவனமாகக் கேளுங்கள்.

وَالَّذِينَ كَذَّبُوا بِآيَاتِنَا سَنَسْتَدْرِجُهُمْ مِنْ حَيْثُ لَا يَعْلَمُونَ

நம் வசனங்களைப் பொய்ப்பிப்போரை அவர்கள் அறியாத நிலையில் படிப்படியாகப் பிடிப்போம். திருக்குர்ஆன் 7:182

وَأُمْلِي لَهُمْ إِنَّ كَيْدِي مَتِينٌ

அவர்களுக்கு (இவ்வுலகில்) அவகாசம் அளிக்கிறேன்; என் சூழ்ச்சி மிகவும் உறுதியானது. திருக்குர்ஆன் 7:183

அன்புச் சகோதர சகோதரிகளே உங்களை எங்கள் உடன்பிறப்புகளாகவே நாங்கள் கருதுகிறோம். நீங்கள் இஸ்லாமை சரியாக அறியாமல்தான் இவ்வாறு செய்கிறீர்கள் என்பதையும் நாங்கள் அறிகிறோம். நாளை மறுமையில் நீங்கள் நரகத்திற்குச் சென்றுவிடக்கூடாது என்ற தூய எண்ணத்தில்தான் அல்லாஹ்வுக்கு வெறுப்பான, இஸ்லாமில் இல்லாத காரியங்களை விட்டு ஒதுங்கிக் கொள்ளுங்கள் என மனித நேயத்தோடு கூறுகிறோம். இம்மையிலும் மறுமையிலும் உங்களுக்கு அல்லாஹ்வின் கருணை வேண்டும் என நாங்கள் விரும்புகிறோம். இது போன்ற காரியங்களை விட்டும் உங்களைத் தடுப்பதால் எங்களுக்கு வேறு என்ன இலாபம் இருக்கிறது என்பதை ஒரு நிமிடம் சிந்தித்துப் பாருங்கள் புரியும். வல்ல அல்லாஹ் நம் அனைவரையும் நேர்வழியில் நடத்துவனாக!

وَمِمَّنْ خَلَقْنَا أُمَّةٌ يَهْدُونَ بِالْحَقِّ وَبِهِ يَعْدِلُونَ

நாம் படைத்தவர்களில் ஒரு கூட்டத்தார் இருக்கிறார்கள். அவர்கள் சத்தியத்தைக் கொண்டு நேர்வழியைக் காட்டுகின்றனர். அதைக் கொண்டு நீதியும் செலுத்துகிறார்கள். திருக்குர்ஆன் 7:181

**ஏர்வாடி முஸ்லிம் ஜமாத் (JAQH)**
97A வடக்கு மெயின் ரோடு, ஏர்வாடி, நெல்லை மாவட்டம்.